பக்கங்கள்: நான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

சுடர்: 6 திருவள்ளுவர் ஆண்டு 2022 ஆவணி 09 ஞாயிற்றுக்கிழமை (25-08-1991) UTHAYAN — A Lively National Tamil Daily கதிர்: 264

# தொண்டா விரும்பினால் இங்கு பேச்சுக்கு வரலாம்



## அன்ரன் பாலசிங்கம் அழைப்பு

யாழ்ப்பாணம், ஆகஸ்ட் 25

''இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கான பேச்சுவார்த்தைகளை நடத்துவதற்கு அமைச்சர் தொண்டமான் விரும்பினால் யாழ்ப்பாணம் வரலாம்.''

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கம் இவ்வாறு தெரிவித்திருக்கிறார்.

இனப் பிரச்சினை தொடர்பாக அமைச்சர் தொண்டமான் அளித்த பேட்டி ஒன்று கொழும்பு ஆங்கில வாரஇதழ் ஒன்றில் அண்மையில் வெளியாகியிருந்தது.

அதுகுறித்து செய்தியாளர்கள் கேட்டபோது கலாநிதி பாலசிங்கம் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

விடுதலைப் புலிகளுடன் பேச்சுக்கள் நடத்துவதற்குத் தான் ஒரு தூதவரை அனுப்பியதாக திரு. தொண்டமான் அந்தப் பேட்டியில் தெரிவித்திருந்தார்.

அதுபற்றி கலாநிதி பாலசிங்கத்தி ம் கேட்டபோது —

''அது உண்மைதான் ஆனால் திரு. தொண்டமானின் தூதுவர் இப்போது வரவில்லை. இரண்டரை மாதங்களுக்கு முன் வந்து சென்றார்''-என்று பதிலளித்

[3 ஆம் பக்கம் பார்க்க]

## இப்போதைக்கு தொண்டா இங்கு வரமாட்டாராம்!

கொழும்பு, ஆக. 25

தாம் உடனடியாக யாழ்ப்பாணத்திற்குப் போகும் உத்தேசம் இல்லை என்றும்—

ஆனால் அங்குபோய் விடுதலைப் புலிகளின் தலைவர்களுடன் தாம் பேசுவது சமாதானத்துக்கான முயற்சிகளைத் துரிதப்படுத்துமாயின், அங்கு போகத் தாம் தயார் என்றும் திரு. தொண்டமான கொழும்பில் நேற்றுத் தெரிவித்தார்.

''சமாதானம் ஏற்படுவதற்காக இரு தரப்பினரும்

[3 ஆம் பக்கம் பார்க்க]

## சீனாவிலிருந்து வருகின்றன

## ஸ்ரீலங்கா கடற்படைக்கு 3 பெரிய பீரங்கிப் படகுகள்

கொழும்பு, ஆக. 25

இம்மாத இறுதிக்குள் அதிவேகமாகச் செல்லக்கூடிய, பெரிய சீன ஷாங்காய்தர பீரங்கிப் படகுகள் மூன்று ஸ்ரீலங்கா கடற்படைக்கு வந்து சேரும் என்று எதிர்பார்க்கப்படுவதாக கொழும்புச் செய்திகள் தெரிவித்தன.

அவற்றில் 37 மில்லி மீற்றர் மற்றும் 25 மில்லி மீற்றர் தானியங்கி பீரங்கிகள் (Cannon) பொருத்தப்பட்டிருக்கும் என்று தெரிவிக்கப்படுகிறது.

அப்பீரங்கிகள் தற்போது ஸ்ரீலங்கா கடற்படையிடம் இருப்பவற்றைப் பார்க்கிலும் ஆகக்கூடிய சுடும் சக்தி கொண்டவை என்றும் தெரிவிக்கப்பட்டது.

தற்போது கடற்படையிடம் இருக்கும் ஆறு ஷாங்காய் 2 தர பீரங்கிப் படகுகள் விரைவில் சேவையில் இருந்து அகற்றப்படவுள்ளன. இவை 1970 ஆம் ஆண்டில் கொள்

[3 ஆம் பக்கம் பார்க்க ]

## புலிகளின் தொடர்பாளர் கைது!

விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர் பிரபாகரனுக்கும் சென்னையிலுள்ள அவரது தோழர்களுக்கும் இடையில் தொடர்பாளராக பணியாற்றியவர் என்று கருதப்படும் சிவா என்ற நபர் நேற்று கரூர்கோட்டம், செட்டிப்பாளையம் என்ற இடத்தில் கைது செய்யப்பட்டதாக ''தூரதர்ஷன்'' அறிவித்தது.

அவருடன் இருந்த வேறு இரண்டு பேர் பொலிஸாரைக் கண்டதும் தம்மிடமிருந்த ஐந்து லட்சம் ரூபா அடங்கிய பையை வீசி எறிந்து விட்டுத் தப்பிச் சென்றனர் என்றும் கூறப்பட்டது. (உ-த)

# சூடுகாட்டியஷெல்வெடித்தது! இருவர் உடல் சிதறிப் பலி!

## நால்வர் காயம்; வட்டுக்கோட்டையில் சம்பவம்

யாழ்ப்பாணம், ஆக. 25

வெடிக்காத நிலையில் கிடந்த ஷெல் ஒன்றைக் கழற்றிப் பார்ப்பதற்காக அதனை அடுப்பில் சூடு காட்டினார்களாம் இரு இளைஞர்கள்!

அந்த ஷெல் திடீரென வெடித்ததில் அவர்கள் இருவரும் அந்த இடத்திலேயே உடல் சிதறிப் பலியானார்கள். ஒரே குடும்பத்தைச் சேர்ந்தமூவர் உட்பட நான்கு பேர் காயமடைந்தனர், வீட்டுக்குசினி கின்னாபின்னமானது.

வட்டுக்கோட்டை நல்லமாவடி என்ற இடத்தில் நேற்றுக்காலை பத்து மணியளவில் இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

சங்கரத்தை வயல் பகுதி வீதியோரத்தில் அநாதரவாகக் கிடந்த ஷெல் ஒன்றை எடுத்துச்சென்று சூடுகாட்டிய போதே அது வெடித்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

இச்சம்பவத்தில் இராஜா உதயகுமார் (வயது 26), நடேசு சற்குணராசா (வயது

[3 ஆம் பக்கம் பார்க்க]

# சுமுக நிலை வரை காத்திராது அகதிகளை அனுப்ப முயற்சி

### 6 ஆயிரத்து800 ஈழத்தமிழரின் பெயர்ப்பட்டியல் ஸ்ரீலங்கா அரசின் பரிசீலனைக்கு

சென்னை, ஆக. 25

இந்தியாவில் உள்ள இலங்கை அகதிகளை திருப்பி அனுப்புவதற்கு முன்னோடியாக 6.800 அகதிகளின் பெயர்களை இந்திய அரசாங்கம் இலங்கையிடம் சமர்ப்பித்துள்ளது.

இலங்கைக்கான இந்தியத் தூதுவர் திரு. நரேந்திரநாத் ஜா 'இந்து' நாளிதழுக்கு அளித்த போட்டியில் இதனைத் தெரிவித்துள்ளார்.

இலங்கை அகதிகளை மடு முகாம் போன்ற முகாம்களுக்கு அனுப்பிவிடலாம். இலங்கையில் சுமுக நிலை ஏற்படும் வரை அவர்களை இந்தியாவில் தங்க வைக்க வேண்டிய அவசியம் இல்லை என்றும் அவர் தனது பேட்டியில் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் சுமுக நிலை ஏற்படும் வரை காத்திராது அகதிகளை அனுப்பும் யோசனை தற்போது இந்திய அரசாங்கத்தின் பரிசீலனையில் இருந்து வருகின்றது. இதன் மூலம் தமிழக முதல

[3 ஆம் பக்கம் பார்க்க]

# ஆயுத பலாத்காரத்தில் நாம் ஆசை கொண்டவர்கள் அல்லர்

## சிறப்புப் பேட்டியில் மாத்தயா

யாழ்ப்பாணம், ஆக. 25

நாம் வன்முறை வாதத்தை வழிபடுபவர்கள் அல்லர். ஆயுத பலாத்காரத்தில் ஆசை கொண்டவர்களும் அல்லர். ஆனால் நாம் ஓர் இன அழிவில் இருந்து எம்மைப் பாதுகாத்துக் கொள்வதாக இருந்தால் எமக்கு எதிராகத் திணிக்கப்படும் ஆயுத வன்முறையை, ஆயுத வன்முறையால்தான் சந்திக்கவேண்டும்

—இவ்வாறு கூறினார் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் பிரதித் தலைவர் திரு. கோ. மகேந்திரராஜா (மாத்தயா).

உதயன் அரசியற் செய்தியாளருக்கு அளித்த சிறப்புப் பேட்டியிலேயே அவர் இப்படிக் கூறினார்.

இந்தப் பேட்டியின் முதற் பகுதி நேற்றைய உதயனில் பிரசுரமானது. அவர் மேலும் கூறியதாவது;-

கேள்வி: ''இனப்பிரச்சினையை இராணுவத் தீர்வின்

[3 ஆம் பக்கம் பார்க்க]

# கம்யூனிஸ்ட் கட்சி திடீரெனக் கலைப்பு!

## கோர்பி இன்று அதிகாலை அறிவிப்பு

## சோவியத் வரலாற்றில் திருப்பம்

மொஸ்கோ, ஆக. 25

சோவியத் யூனியனில் ஏற்பட்ட அரசியல் நெருக்கடிகளை அடுத்து அங்கு கடந்த எழுபது ஆண்டுகளாக ஆட்சி செய்து வந்த கம்யூனிஸ்ட் கட்சி திடீரென கலைக்கப்பட்டது.

சோவியத் யூனியன் அதிபர் மிக்கெயில் கோர்பச்சேவ் இந்த அறிவிப்பை இன்று அதிகாலை விடுத்தார்.

★ கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளர் பதவியிலிருந்து கோர்பச்சேவ் ராஜினாமாச் செய்தார்.

★ கட்சியின் பொதுக்குழு கலைக்கப்பட்டது.

★ கட்சியின் சகல சொத்துக்களும் பறிமுதல் செய்யப்பட்டன.

★ பாதுகாப்புப் படையிலும் உளவு நிறுவனமான கே. ஜி. பியிலும் கம்யூனிஸ்ட் கட்சி நடவடிக்கைகள் அனைத்தும் தடை செய்யப்பட்டன.

- இதற்கான உத்தரவுகளை தாம் விடுத்திருப்பதாக அதிபர் கோர்பச்சேவ் இன்று அதிகாலை சோவியத் டெலிவிஷன் மூலம் அறிவித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### மலிவு விற்பனை

வெளி மாவட்டங்களில் அரசாங்கத்தால் நடத்தப்பட்ட A/L விஞ்ஞான பாடங்கள், ஆண்டு - 5 [புலமைப் பரிசில்] வினாத் தாள்கள் மலிவு விலையில் பெற்றுக் கொள்ளலாம். Bond புத்தக நிறுவனம், 58A, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். (4268)

### தேவை

Sony ICF - SW 1 பொக்கற் றேடியோ உடன் தேவை. விலை விவரத்துடன் தொடர்பு கொள்ளவும். விமல ஸ் நவீன சந்தை, சாவகச்சேரி. (17848)

பெண்கள், சிறுவர்களுக்குரிய ஆடைகள் வெட்டித் தைக்கக் கூடியவர்கள். உடன் தொடர்பு கொள்ளவும். விஜேயா றேட் சென்ரர், 42, மணிக்கூண்டு வீதி யாழ்ப்பாணம். [எழிலகத்தின் முன் பக்] (17885)

எலுமிச்சை, மங்குஸ்தான் பழ நறுக்கள் உண்டுபண்ணக் கூடிய வெற்றுத் தகரப் பேணிகள் மற்றும் ஜாம் போத்தல்கள், ஜாம் போத்தல் மூடிகள் தேவை. தொடர்பு: சைவ வித்தியா விருத்திச் சங்கம். கலாசாலை வீதி. திருநெல்வேலி. [சி-0390]

### மணமகள் தேவை

யாழ் இந்து பெற்றோர் 29 வயது சைவபோசன ஆசிரிய மணமகனுக்கு படித்த, அழகிய மணமகளை எதிர்பார்க்கின்றனர். நட்சத்திரம்: சித்திரை. விவரத்துடன் தொடர்பு: இல. 342 மே/பா உதயன், யாழ்ப்பாணம். (17810)

யாழ். இந்து, சதய நட்சத்திரம் 33 வயதுடைய லண்டனில் நிரந்தர தொழில் புரியும் மணமகனுக்கு ஓரளவு படித்த, அழகிய மணமகள் தேவை. லண்டனில் வசிப்பவர்களும், லண்டன் செல்ல விரும்புபவர்களும் விண்ணப்பிக்கலாம். இல. 344. மே/பா உதயன், யாழ்ப்பாணம். (17851)

### ரைப்ரைட்டர்

Typewriters - தட்டச்சு இயந்திரங்கள் வாங்கவும், விற்கவும் சிறந்த முறையில் திருத்தவும் தமிழ் - ஆங்கில ரைப்பிங் வேலைகளுக்கும், பியூரோ, 39/17, மின்சார நிலைய வீதி, 3ஆம் ஒழுங்கை யாழ்ப்பாணம். (சி-0290)

### நோவு வைத்தியம்

ஒட்டகப்புலம் சமத்தர் நோவு எண்ணெய் எஸ். ரி மெடிக்கல்ஸ், 490, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் பெற்றுக் கொள்ளலாம். (4241)

### வைத்தியம்

செங்கண்மாரி, குடற்புண், சொய்வு, வாதரோகங்கள், பீனிசம், தலையிடி, தலைசுாலவியல், சூதகக்குத்து, சருமநோய்கள் மற்றும் சகல வியாதிகளையும் குணப்படுத்துவார். வேலணை வைத்தியர், சி. இராசரத்தினம், 121. 2 ஆம் குறுக்குத் தரு, யாழ்ப்பாணம். (4818)

### அம்பாள் திருமண சேவை

Engineer Doctor. B.A., B.Sc. ஆகிய பணப் பண்களுக்கு மணமகன் தேவை விண்ணப்ப முற்பணம் ரூபா 50/- அன்னச்ச மிக்கருக்கள் சண்முக ஐயர், வீரமாகாளி அம்மன் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். [17671]

### தவறிவிட்டது

பொன்னு சின்னத்துரை ஆகிய எனது அடையாள அட்டை [290080904V] 19-8-1991 இல் மல்லாகத்திற்கும், சுன்னாகத்திற்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து தனலக்குமி புத்தகசாலை, சுன்னாகம் என்னும் முகவரியில் ஒப்படைக்குமாறு கேட்டுக் கொள்கின்றேன். தகுந்த சன்மானம் வழங்கப்படும். (17889)

### ஆண்டு 5 புலமைப்பரிசில்

தமிழ், கணிதம, ஆங்கில பாடங்களுக்கான பயிற்சிப் பரீட்சையும், இலவச கருத்தரங்கும் ஒவ்வொரு ஞாயிறும் பிற்பகல் நடத்தப்படும். தோற்ற வசதி இல்லாதவர்கள் வினாத் தாள்களுக்கு விடை அளித்து தந்தால் இலவசமாக திருத்திக் கொடுக்கப்படும் Bond புத்தக நிறுவனம், 58A, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். (4261)

### O/L 90, 91

வாராந்த பயிற்சி மதிப்பீடு விஞ்ஞானம், கணிதம் ஆகிய பாடங்களுக்குரிய பகுதி I & II வினாத்தாள்கள் ஒவ்வொரு ஞாயிறும் வெளியிடப்படும். அதற்கு விடையளித்துத் தரும் பட்சத்தில் இலவசமாக விடையுடன் திருத்திக் கொடுக்கப்படும். Bond புத்தக நிறுவனம், 58A. ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். (4260)

### சோதிடம்

தீராத கடன் தொல்லை, தொழில் நட்டம், கல்விக் குழப்பம், விவாகம் நடவாமை, போன்ற துரதிர்ஷ்டங்கள் நீங்கி அதிர்ஷ்டத்துடன் வாழ சாதகத்துடன் நேரில் வரவும். அதிர்ஷ்டம் இன்றேல் பணம் திரும்பப் பெற உத்தரவாதம். ஸ்ரீ மாவை விநாயகர் சோதிட நிலையம், 146, பருத்தித்துறை வீதி, [அரசடிச் சந்தி] நல்லூர். (17867)

**யாழ்ப்பாணம் பல்கலைக்கழகம், இலங்கை**

**மருத்துவ மாணவர்களுக்கான ஆங்கிலப் பாடநெறி**

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்துக்குப் புதிதாக அனுமதிக்கப்பட்ட மருத்துவ மாணவர்களுக்குரிய கல்வி ஆண்டு 1991-09 30 இல் தொடங்கும். இம் மாணவர்களுக்கான ஆங்கிலப்பாடநெறி 1991-09 02 இல் ஆரம்பமாகும். மேற்படி மாணவர்கள் 1991 09-02 ஆம் திகதி காலை 10-00 மணிக்கு யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்து இராமநாதன் மண்டபத்தில் நடைபெறவுள்ள தகுதிகாண் பரீட்சைக்கு பின்வரும் ஆவணங்களுடன் தோற்றுதல் வேண்டும்.

1. தேசிய அடையாள அட்டை
2. பதிவீட்டு அட்டை

**பதிவாளர்.**

[சி 0380]

## 5 ஆம் ஆண்டு நினைவலைகள்

**செல்வி விஸ்வலிங்கம் சத்தியபாமா**
[H. N. B.]

மலர்வு: 3 2-1956 — உதிர்வு: 25 8-1986

சூரியை இணைய வென்றே தண்டா மறைபானாய்
சூரியன் மறைந்த போது கொண்டிலை உலக வாழ்க்கை.

நினைந்து நினைந்துருகும்;

**பெற்றோர், மாமி, சகோதர சகோதரிகள், அத்தான்மார், பெறாமக்கள், உற்றார், உறவினர்கள்.**

யமுனா,
ஆனைக்கோட்டை. (17868)

## ஓராண்டு நினைவஞ்சலி



மலர்வு: 5 — 3 — 1917
உதிர்வு: 23 — 8 — 1990

**அமரர் தம்பு ஆறுமுகம்**
(இளைப்பாறிய பொலிஸ் அதிகாரி)

திதி: 25 - 08 - 1991

பிறந்த ஊருக்காய் அயராது உழைந்தீர்
காவல் துறைதனில் சாதனைகள் படைத்தீர்
அனைவரின் அன்பையும் ஒருங்கே பெற்றீர்
எம்மை வையத்தில் வழிகாட்டி வாழவைத்தீர்
உமது ஆருயிர் என்றும் இறையடியில்
வாழ இறைஞ்சுகிறோம் போதிப் பெருமானை.

**மனைவி, மக்கள், மருமக்கள், உறவினர்கள்.**

''வசந்தம்''
இராசவீதி,
அச்சுவேலி, (17875)

## ஓராண்டு நினைவஞ்சலி



அன்னை மடியில்: 0 — 08 — 1950
ஆண்டவன் சந்நிதியில்: 25 — 08 — 1990

**பர்னாந்து யேசுநாயகம்**
**(அன்ரன்)**

கட்டியவள் கதறியழ
பிள்ளைகள் துடி துடிக்க
பெற்றவள் பதை பதைக்க
உடன் பிறந்தோர் ஏங்கி நிற்க
மாய உலகமதை மாயமாய்
கடந்து சென்ற ஐயா நீ!
இறைவன் திரு நிழலில்
இன்புற்று வாழ்ந்திடுக.

பிரிவால் வாடி நிற்கும்:

**அன்பு மனைவி, பிள்ளைகள், தாய், சகோதர, சகோதரிகள், மச்சான்மார், மச்சாள்மார், உற்றார், உறவினர்கள், நண்பர்கள்.**

3 ஆம் வட்டாரம்,
மண்டைதீவு. (17659)

## கோர்பி - யெல்சின் அதிகாரப் பங்கீடு

மாஸ்கோ, ஆக. 25

நெருக்கடி காலங்களில் அதிகாரங்களை தங்களுக்கிடையில் பகிர்ந்து கொள்வதில் தனக்கும் ரஷ்ய குடியரசு ஜனாதிபதி யெல்சினுக்கும் இடையில் இணக்கம் ஏற்பட்டுள்ளதாக திரு கோர்பச்சேவ் சோவியத் நாடாளுமன்றில் நேற்றுத் தெரிவித்தார்.

இருவரில் ஒருவர் அதிகாரங்களை பிரயோகிக்க முடியாத ஓர் இக்கட்டான சூழ்நிலை தோன்றும் போது ஒருவரின் அதிகாரங்களும், பொறுப்புகளும் தானாகவே மற்றவரிடம் சென்றடையும் என்றும் கோர்பச்சேவ் தெரிவித்தார்.

## 4ஆம் ஆண்டு நினைவஞ்சலி



**அமரர் S. K. சின்னத்தம்பி**
(சக்கடத்தார்)

தோற்றம்: 06 05 - 1914 — மறைவு: 07 - 09 - 1987

திதி: 25 — 08 — 1991

எங்கள் குடும்ப ஒளி விளக்கே!
நீங்கள் மறைந்து நாலாண்டு சென்றாலும்
உங்கள் நினைவு மாறாது.

உங்கள் ஆத்ம சாந்திக்காக இறைவனை வேண்டும்

**அன்பு மனைவி, அருமை மக்கள், மருமக்கள், பேரன், பேத்தி.**

[17670]

## ஓராண்டு நினைவஞ்சலி



அன்னையின் மடியில்: 1964 — 08 — 21
கொடியவர் பிடியில்: 1990 — 08 — 25

**நீக்கோதேம் பிரான்சிஸ் சேவியர்**

ஆண்டொன்று சென்றாலும் உங்கள் நினைவு - மாறாதையா
துன்பம் உங்களைத் துரத்திடும் வேளையிலே
ஆண்டவனே தஞ்சமென்று அவன் சன்னிதானம் - ஓடிச் சேருகையில்
உங்களை உருவாக்கிய ஆண்டவனே உங்களைத் - தனக்கே
கொடியவர் கையினலே அழைத்துக் கொண்டார்
ஆவியாக கனவிடை காட்சி தரும் - உங்களுக்கு
ஆறாத் துயரத்துடன் நன்றி கூறுவதுடன் - உங்கள்
ஆத்மா சாந்திக்காக ஆண்டவனை - இறைஞ்சுகின்றோம்.

உங்கள் நினைவால் ஏங்கித் தவிக்கும்:

**அன்பு மனைவி, பெற்றோர், சகோதரர்கள், மாமன், மாமி, மச்சான்மார், மச்சாள்மார், உற்றார், உறவினர்கள், நண்பர்கள்.**

3 ஆம் வட்டாரம்
மண்டைதீவு. [17660]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதயன்

### பேச்சு அவசரமா?

ஸ்ரீலங்கா அரசாங்கத்துக்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையில் உடனடியாகப் பேச்சுவார்த்தைகள் நடக்கும் சாத்தியம் எதுவுமில்லை — என்று சுயேச்சை வட்டாரம் ஒன்று உதயனுக்குத் தெரிவித்திருந்தது.

வெள்ளிக்கிழமை இரவு அந்தத் தகவலை வெளியிட்ட வட்டாரம், இரு சாரரையும் பேச வைப்பதற்கு இரண்டு, மூன்று நாட்களாகச் செய்த முயற்சி தோல்வி அடைந்த பின்னரே அந்த முடிவுக்கு வந்தது.

தமது இலட்சியத்தை அடைவதற்கு வன்முறை வழியை நாடுவதில்லை என்று விடுதலைப் புலிகள் அறிவிக்க வேண்டும். எல்லாத் தமிழ்க் குழுக்களும் பங்குபற்றும் நிலையில் பேச்சுக்கள் நடைபெறவேண்டும்— ஆகிய இரண்டு நிபந்தனைகளையும் எந்தச் சூழ்நிலையிலும் விட்டுக் கொடுக்க முடியாது என்று அரசாங்கம் சம்பந்தப்பட்ட சுயேச்சை வட்டாரத்துக்குத் திட்டவட்டமாகத் தெரிவித்திருக்கிறது.

நிபந்தனையில்லாத பேச்சுவார்த்தை என்றால் அதற்குத் தயார். எந்த ஒரு நிபந்தனையுடனும் கூடிய பேச்சுவார்த்தைக்கு நாம் இணங்க மாட்டோம் — இவ்வாறு விடுதலைப் புலிகள் அழுத்தம் திருத்தமாகக் கூறிவிட்டனர்.

இரு சாராரும் விடாப்பிடியாக நின்றால் சமரசம் வருவது எவ்வாறு? பேச்சுவார்த்தை நடத்துவது எங்ஙனம்?

முரண்பட்டு நிற்கும் இரு தரப்புகள் சமரச உணர்வுடன் பேச்சுவார்த்தையில் ஈடுபட விருப்பம் கொண்டால், அங்கே நிபந்தனை என்ற பதத்துக்கு இடமிருக்கக் கூடாது. ஒரு பக்கம் அடுத்த பக்கம் மீது சில நிபந்தனைகளை விதித்துக் கொண்டு பேச வருமாறு அழைப்பது, கட்டி வைத்து விட்டு நடக்க வருமாறு கேட்பது போலாகும்!

நிபந்தனையுடன் பேச்சுக்குப் போவதென்றால் சமபலமான நிலையில் நின்று விடயங்களை ஆராய முடியாது. நிபந்தனையை விதித்த தரப்புப் பலமுள்ளதாகவும், அதனை ஏற்றுக்கொண்ட பக்கம் பலவீனமானதாகவும் எடை போடப்படும்.

அதன் பின்னர் சமபலத்தில் நின்று பேசிச் சமரசம் —தீர்வு— காண்பது எப்படி?

இந்தச் சிறிய தர்க்க உண்மையைப் புரிந்து கொள்ளாமலா அரசு பேச்சுவார்த்தைக்கு நிபந்தனைகள் விதிக்கிறது? இல்லை. விடுதலைப் புலிகளைப் பலவீனமான பக்கமாகக் காட்டிக் கொண்டு பேசினால் தான் தாம் நினைத்ததைச் சாதிக்க முடியும் என்று அது எண்ணுகிறது!

நிபந்தனையில்லாத பேச்சுவார்த்தை நடந்தால் மட்டுமே இரு சாராரும் ஏற்கக்கூடிய ஒரு தீர்வை அல்லது கருத்திணக்கத்தைக் காண வாய்ப்பு உருவாகும்.

அரசாங்கமோ தனது கருத்தும், தீர்வும் மேலோங்கி நிற்கும் ஒரு நிலைப்பாட்டையே விரும்புகிறது. அத்தகைய ஒரு பின்புலத்தில் பேச்சுவார்த்தை நடத்துவதை விட, பேசாமல் இருப்பதே மெத்தவும் நல்லது. காலத்தையும், நேரத்தையும் வீணாக்கி அப்படி ஒரு பேச்சுவார்த்தை தமிழர்களுக்குத் தேவையில்லை. அது கடந்த காலப் பேச்சுக்கள் போலவே பயன் தராப் பேச்சாக முடியும்! அப்படி ஒரு பேச்சுவார்த்தைக்குத் தமிழர்கள் அவசரப்படவுமில்லை. இதனை அரசு உணர வேண்டும்.

# ஆயுத பலாத்காரத்தில் . . . .

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]
கொண்டு வர முடியாது. பேச்சுவார்த்தை, கருத்து உடன்பாடு மூலமான அரசியல் தீர்வே சரியான வழி'' என்று அரசு கூறுகின்றது. இது பற்றி உங்கள் இயக்கத்தின் நிலைப்பாடு என்ன?

பதில்: இது சிங்கள அரசு நீண்டகாலமாக போதித்து வரும் அரசியல் சித்தாந்தம். 'பேசுவது வேதாந்தம் இடிப்பது கோயில்' என்ற வகையில், சொல்வது ஒன்றும் செய்வது வேறொன்றுமாக சிங்கள ஆளும் வர்க்கமானது நாற்பது ஆண்டுகளுக்கு மேலாக தமிழினத்தை ஏமாற்றி வருகின்றது இன்றும் கூட சமாதான தத்துவத்தை போதித்துக் கொண்டு போர் நடவடிக்கைகளை தீவிரமாக்கி வருகின்றது.

இராணுவப் பாதை என்ற விடயத்தில், சிங்கள அரசின் இராணுவ அடக்கு முறைக்கும் விடுதலைப் புலிகளின் ஆயுத வடிவான விடுதலைப் போராட்டத்திற்கும் மத்தியிலான வேறுபாட்டை நாம் முதலில் புரிந்து கொள்ள வேண்டும்.

அடக்கு முறையாளரின் இராணுவ ஒடுக்கு முறைக்கும், அடக்கப்படும் மக்களின் விடுதலைப் போருக்கும் மத்தியில் அடிப்படையான வேறுபாடு உண்டு. இரண்டையுமே இராணுவ வாதம் என்று ஒரே தரத்தில் ஒப்பிட முடியாது.

### அறத்தின்பாலானது

அடக்கு முறையாளனின் இராணுவம் அநீதியின் ஆயுதமாகச் செயல்படுகிறது. மக்களை அடக்கவும், ஒடுக்கவும், அழிக்கவும் பயன்படுத்தப்படுகின்றது. சிங்கள அரச படைகள் இந்த அழிப்பு வேலைகளையே செய்கின்றன. தமிழினத்தை இன ரீதியாக ஒழித்துக் கட்ட அவை பயன்படுத்தப்படுகின்றன.

அடக்கப்படும் மக்கள் அநீதியை எதிர்த்துப் போராடுகிறவர்கள். ஆயுதம் ஏந்திப் போராடவும் நிர்ப்பந்திக்கப் படுகின்றார்கள். அடக்கப்படும் மக்களின் ஆயுதப் போராட்டம் அறத்தின் பாலானது. இந்த வகையில் விடுதலைப்புலிகளின் ஆயுதப் போராட்டம் நீதியை அடிப்படையாகக் கொண்டது. மனித விடுதலையை இலட்சியமாகக் கொண்டமையால் சாராம்சத்தில் அது முற்போக்கானது.

### ஆக்கிரமிப்புப் படையும் விடுதலைப் படையும்

தமிழ் மக்களின் தாயகப் பூமியை ஆக்கிரமித்து அழிக்கும் நோக்குடன் சிங்கள இராணுவம் போராடுகிறது. தமிழ் மண்ணை மீட்டெடுத்து தமிழ் மக்களை பாதுகாக்கும் நோக்குடன் புலிப்படை போராடுகிறது. ஒன்று ஆக்கிரமிப்பு இராணுவமாகவும், மற்றது விடுதலை இராணுவமாகவும் செயற்படுகின்றன. எனவே இலட்சியத்தில், நோக்கில், தார்மீக அடிப்படையில் இருபடைகளுக்கும் மத்தியில் வேறுபாடு இருக்கிறது. இந்த வேறுபாட்டைப் புரிந்து கொள்ளாது இருதரப்பினரும் இராணுவ வன்முறையை கடைப்பிடிப்பதாகக் கருதுவது தவறு.

### வேறு வழி இல்லை

சிங்கள ஆளும் வர்க்கத்தின் இராணுவ ஒடுக்கு முறைக்கு எதிராக, தமிழீழ மக்கள், நீண்டகாலமாகவே சமாதான வழியில், அகிம்சை வழியில், மென்முறைப் போராட்டங்களை நடத்தி வந்திருக்கின்றார்கள்.

இந்தப் போராட்டங்கள் எல்லாம் இராணுவ வன்முறை மூலமாக நசுக்கப்பட்டன. பலவீனர்களாக, நிராயுதபாணிகளாக நின்ற எமது மக்கள் மீது தொடர்ந்தும் இராணுவ பயங்கரவாதம், கட்டவிழ்த்து விடப்பட்டது. இந்தச் சூழ்நிலையில் ஆயுதம் ஏந்திப் போராடுவதைத் தவிர எமக்கு வேறு வழி இருக்கவில்லை. எனவே, அரச ஒடுக்குமுறைதான் தமிழீழத்தின் ஆயுதப் போராட்டத்தைப் பிறப்பெடுக்கச் செய்தது.

அரசியல் இலட்சியம் ஒன்றை அடைவதற்காகவே நாம் ஆயுதம் ஏந்திப் போராடுகிறோம். எனவே, எமது ஆயுதப்போராட்டத்தை ஓர் அரசியல் போராட்ட வடிவமாகவே பார்க்க வேண்டும்.

எமது மக்கள் சகல மனித உரிமைகளுடனும், அரசியல் சுதந்திரங்களோடும் நிம்மதியாக, பாதுகாப்பாக, கௌரவமாக வாழவேண்டும் என்பதற்காகவே நாம் போராடுகின்றோம்.

### சமாதானத்திற்கு விரோதிகள் அல்லர்

நாம் சமாதானத்திற்கு விரோதிகள் அல்லர். நிம்மதி அற்றுப்போன எமது மண்ணில் நிரந்தர சமாதானத்தை ஏற்படுத்துவதற்காகவே நாம் போராடுகின்றோம்.

நீண்டகாலமாகவே ஆயுதப் போராட்ட வடிவத்தை நாம் வரித்துக் கொண்டபோதும் சமாதான வழிமுறைகளை நாம் நிராகரிக்கவில்லை. சமாதானப் பேச்சுக்கள் மூலம் பிரச்சினைக்குத் தீர்வுகாணும் அணுகு முறையை நிராகரிக்கவில்லை.

நாம் பலதடவைகள் போர்நிறுத்தம் செய்திருக்கிறோம்; சமாதானப் பேச்சுவார்த்தைகளில் பங்குபற்றியிருக்கிறோம்; சமரச வழி மூலம் எமது மக்களின் பிரச்சினைக்கு ஒரு நிரந்தரத் தீர்வு காண முயசித்திருக்கிறோம்; ஆனால் சிங்கள அதிகார வாக்கம் சமாதான வழியை விரும்பவில்லை. தமிழர் தேசியப் பிரச்சினைக்குச் சமாதான வழி மூலம் தீர்வுகாண விரும்பவில்லை.

சிங்கள அரசு இராணுவத் தீர்வையே விரும்புகிறது. இராணுவப் பலம்மூலம் தமிழ் மண்ணை ஆக்கிரமித்து, இராணுவ வல்லாதிக்கம் வாயிலாக தமிழரை அடக்கு முறைக்குள் ஒடுக்கி வைக்கவே சிங்கள ஆட்சிப்பீடம் விரும்புகிறது. அன்று தொடக்கம் இன்றுவரை இந்தக் குருட்டுத்தனமான இராணுவக் கொள்கையை சிறிலங்கா கடைப்பிடித்து வருகின்றது. இனவாதமும், போர் வெறியும், இறுமாப்பும் கொண்ட இந்த அணுகுமுறையைக் கைவிட்டு சமாதான வழி மூலம் பிரச்சினைக்கு தீர்வினைக் காண்பதற்குச் சிங்கள அரசு தயாராகவில்லை.

### ஆளும் வர்க்கத்துக்கு சவால்

சிங்கள ஆளும் வர்க்கத்தின் இராணுவ வாதத்திற்குப் பெரும் சவாலாக விடுதலைப் புலிகள் ஆயுத எதிர்ப்பு இயக்கம் இன்று அபாரமான வளர்ச்சி கண்டிருக்கிறது. ஆக்கிரமிப்புக் கொள்கை நடைமுறைச் சாத்தியமாகாது என்ற யதார்த்த உண்மையை புலிகளின் போர் நடவடிக்கை ஒவ்வொன்றும் சிங்கள அரசுக்கு எடுத்தியம்பி வருகின்றது. அப்படி இருந்தும் சிங்கள ஆளும் வர்க்கம் தனது இராணுவ வாத சித்தாந்தப் பிடியிலிருந்து இன்னும் விடுபட்டதாகத் தெரியவில்லை.

இந்தச் சூழ்நிலையில் நாம் என்ன செய்வது? அடக்கு முறையிலும், ஆயுத பலத்திலும் நம்பிக்கைகொண்ட ஒரு எதிரியை எப்படி எதிர்கொள்வது? நீதிக்கும், நியாயத்திற்கும், தர்மத்திற்கும் இடம் கொடாத ஒரு பகைவனை எப்படிக் கையாளுவது? இன அழிப்பில் இறுதித்தீர்வு காண விரும்பும் ஓர் இனவாத அரக்கனை சமாளிப்பது எப்படி?

நாம் துணிவோடும், உறுதியோடும், தன்னம்பிக்கையோடும் தொடர்ந்தும் போராடுவதைத் தவிர வேறு வழியில்லை. ஒரு வலிமையான சக்தியுடன் போராடுவதாகவிருந்தால் நாமும் வலிமை பெற்றவர்களாக இருக்கவேண்டும். பலம் தான் எமது போராட்டத்தை நிர்ணயிக்கும் சக்தியாக விளங்கும்.


### மக்கள் சக்தி

நாம் எமது படை பலத்தையும், ஆயுத பலத்தையும், பெருக்கி, ஒரு வலுப்பெற்ற சக்தியாக உருப்பெற்றால் தான் எதிரியின் சவாலை எதிர்கொண்டு எமது விடுதலை இலட்சியத்தை வென்றெடுக்க முடியும்.

ஒரு விடுதலை இயக்கத்திற்கு பலம் ஊட்டுவது மக்கள் சக்தியே. மக்கள் சக்தியானது ஒரு தேசியச் சக்தியாக உருவெடுத்து, போராட்டச் சக்தியாகமாறி, விடுதலை இயக்கத்துடன் இணைந்து கொள்ளும்போதே நாம் ஒரு வலுமிக்க சக்தியாக உருப்பெறுவோம்.

நாம் தொடர்ந்து போராடுவோம். ஆனால் சமாதானத்தின் கதவுகளை நாம் மூடிவிடவில்லை. போருக்கும் சமாதானத்திற்கும் அத்திவாரமாக இருக்கவேண்டியது எமது பலம்தான்.

(பேட்டியின் மேலதிக பகுதிகள் பின்னர் வெளிவரும்)

நற்பெருங் காவலனே!

ஆறுமுக வேலவனே அடியவரின் காவலனே
அல்லலுறும் அடியவரின் துயர்களைய வாராய்
எல்லையிலே எம்மண்ணை காத்திடவே நிற்கின்ற
எம்மிளைஞர் வீரமதை எடுத்துரைக்க வாராய்

நல்லையிலே வீற்றிருந்து நல்லருளை பொழியும்
நாயகனே நம்மவரின் நலன்பேணும் காவலனே
வீரஞ் செறிந்தநம் ஈழமண் மீட்டிட
போரிடும் வீரவேங்கைகளுக் கருள்தர வாராய்.

அரியாலையூர் ஐ. குகதாசன்.


## சுமுக...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]
மைச்சர் ஜெயலலிதாவையும் திருப்திப்படுத்த முடியும் என்றும் ஜா தனது பேட்டியில் தெரிவித்துள்ளார்.

அகதிகளை திருப்பி அனுப்புவதற்கு ஏற்ற சுமுகமான சூழ்நிலையைத் தோற்றுவிக்குமாறு இலங்கை அரசை இந்தியா சமீப நாட்களாக கோரிவந்தது ஜாவின் பேட்டி இந்திய நிலைப்பாட்டின் மாற்றத்தைக் காட்டுவதாக அவதானிகள் தெரிவிக்கின்றனர். (இ-த)

## ஆசிரியர் கூட்டம்

யாழ்ப்பாணம், ஆக. 25

தோட்டப் பாடசாலைகளில் சேவை செய்த ஆசிரியர்களின் கூட்டம் நாளை திங்கட்கிழமை காலை 10 மணிக்கு நல்லூர்ஸ்தான சி. சி. பாடசாலை மண்டபத்தில் நடைபெறும்.

தோட்டப் பாடசாலைச் சேவையை ஒய்வூதியத்துக்கான சேவையுடன் சேர்ப்பதற்கு தேவையான ஆலோசனைகளை வழங்கி, விவரங்களைச் சேகரித்து கல்வி அமைச்சுக்கு அனுப்புவதற்கு வசதியாகவே இக்கூட்டத்தை தமிழர் ஆசிரியர் சங்கம் ஏற்பாடு செய்துள்ளது.

கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு இளைப்பாறிய சேவையில் உள்ள சகல தோட்டப்பாடசாலை ஆசிரியர்களும் கோரப்பட்டுள்ளனர். [ஆ]

## தொண்டா...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]
தார்.

''சமாதானப் பேச்சுக்களில் ஆக்கபூர்வமான அக்கறையுள்ள எவருடனும் பேச்சு நடத்த விடுதலைப் புலிகள் தயாராக இருக்கிறார்கள்.

ஸ்ரீலங்கா அரசுடனும் முன் நிபந்தனையற்ற பேச்சுக்கு நாங்கள் தயார் என்பதை இந்த வருட ஆரம்பத்திலேயே கூறிவிட்டோம். அந்த நிலையில் மாற்றம் ஏதுமில்லை.

திரு. தொண்டமான் பேச்சு நடத்த யாழ்ப்பாணம் வரும் பட்சத்தில் அந்தப் பயணத்தின்போது அவருக்குத் தகுந்த பாதுகாப்பளிக்கநாம் தயார்'' —இவ்வாறு கலாநிதி பாலசிங்கம் மேலும் தெரிவித்தார்.

சமாதானப் பேச்சுக்கான முன்முற்சியாக அமைச்சர் தொண்டமான் யாழ்ப்பாணம் வர முயன்றாலும்— விடுதலைப் புலிகளின் அறிவிப்பை ஏற்று அரசு நிபந்தனையற்ற பேச்சு நடத்த உடனடியாக இணங்கி வருமா என்பதுகேள்விக்குறியே என்று சுயாதீன வட்டாரங்கள் சுட்டிக் காட்டின. (உ-எ-த-5)

## இப்போதைக்கு...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]
பேச்சு நடத்த முன்வரவேண்டும்.

''விடுதலைப் புலிகளின் அறிவிப்புக் குறித்து, இனப் பிரச்சினைக்குத் தீர்வு காண நியமிக்கப்படும் நாடாளுமன்றத் தெரிவுக்குழு ஆராயும். அக்குழு எடுக்கும் முடிவைப் பொறுத்தே அடுத்த நடடிக்கை மேற்கொள்ளப்படும்''— என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

## சூடுகாட்டிய...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]
22). ஆகிய இரு இளைஞர்களே உயிரிழந்தவர்களாவார்.

உயிரிழந்த உதயகுமாரின் சகோதரிகளான இராசா, ரஜினி (வயது 17), இராசா யோகராணி (வயது 19), தந்தையான நாகன் இராசா (வயது 70) ஆகியோரும் சுவாமிநாதன் தஷ்யந்தன் (வயது 9) என்ற சிறுவனுமே காயமடைந்தனர்

(உ-15-3 28)

## ஸ்ரீலங்கா...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]
வனவு செய்யப்பட்டவையாகும்.

புதிய பீரங்கிப் படகுகளில் உள்ள பீரங்கிகள் தாமாக குண்டுகளை நிரப்பக் (Automatic Loaders) கூடியவையாகும்.

தற்போது கடற்படையிடம் உள்ள பீரங்கிப் படகுகளில் குண்டுகளை கையால் நிரப்ப வேண்டியிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

(உ-எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பதவி உயர்வுகள் மீண்டும் திறமை அடிப்படையில்

கொழும்பு ஆக. 25

அரசாங்கத் திணைக்களங் கள் மற்றும் அரச நிறுவனங் களில் பணிபுரியும் சகல ஊழி யர்களுக்கும் திறமை, சேவை மூப்பு ஆகியவற்றின் அடிப் படையிலேயே இனிமேல் பதவி உயர்வு வழங்கப்படும்.

எந்த அரச பதவிக்கேனும் இனவிகிதாசார முறையில் பதவி உயர்வு வழங்கப்படக் கூடாது என்று பொதுநிர் வாக அமைச்சு அண்மையில் விடுத்த சுற்றுநிருபம் ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நீண்ட காலமாக அரசாங்க ஊழியர்களுக்கு திறமை, சேவை, அனுபவம் ஆகிய வற்றை அடிப்படையாகக் கொண்டு பதவி உயர்வுகள் வழங்கப்பட்டன.

மிகச் சமீபத்திலேயே இன விகிதாசார முறையில் பதவி உயர்வு வழங்கும் திட்டம் அமுலுக்கு வந்தது. சுங்கத் திணைக்களத்தைச் சேர்ந்த தமிழ் அதிகாரி ஒருவர் தாக் கல் செய்த அடிப்படை உரிமை மீறல் வழக்கைத் தொடர்ந்து நீதிமன்றம் இனவிகிதாசார முறைக்கு எதிராகத் தீர்ப்பு வழங்கி இருந்தது. அதனைத் தொடர்ந்தே அரசாங்கம் பதவி உயர்வுகளை பழைய முறைக்கு மீண்டும் மாற்றி உள்ளது.

[அ-எ]

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



| தோற்றம்: | மறைவு: |
|---|---|
| 15 | 16 |
| — | — |
| 12 | 9 |
| — | — |
| 1978 | 1989 |

### வித்தியானந்தன் கிசோக்குமார்

[கிசோ]

[புத்தூர் ஸ்ரீசோமஸ்கந்தா கல்லூரி 6 ஆம் ஆண்டு மாணவன்]

திதி: 25 8-1991

ஆண்டுகள் இரண்டு ஓடி மறைந்தாலும்
ஆறாத உன் நினைவு எமது நெஞ்சங்களில்
தேறாது எம் நெஞ்சத்து உன்நினைவலைகள்
மாறாது வேதனைகள் உன்னை அடையும் வரை
வாழ்வே மாயம் என்று அமைதியுறுவோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

உமது பிரிவால் வாடும்;
குடும்பத்தினர், உறவினர்கள்.

புத்தூர் மேற்கு,
புத்தூர்.

[17887]

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



| தோற்றம்: | மறைவு: |
|---|---|
| 22 | 05 |
| — | — |
| 02 | 09 |
| — | — |
| 1932 | 1990 |

அமரர்

### கு. பாலசுப்பிரமணிய ஐயர்

(இளைப்பாறிய ஆசிரியர்)

அன்னாரின் சேவையை நினைவு கூருகின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்.

யா/நாயன்மார்கட்டு,
மகேஸ்வரி வித்தியாசாலை,
யாழ்ப்பாணம்.

[17862]

# இரத்ததான அட்டைகள்

யாழ்ப்பாணம், ஆக. 25

ஆனையிறவில் காய மடைந்த போராளிகளுக்கு இரத்தம் வழங்கியவருக்கு உரிய இரத்ததான அட்டை கள் விநியோகிக்கப்பட உள்ளன.

ஜூலை 11 தொடக்கம் 30 ஆம் திகதி வரை இரத்த தானம் செய்தோர் தமது அட்டைகளை நாளையதினம் திங்கட்கிழமை காலை 9.30 மணிமுதல் பி. ப. 3 மணி வரை பாலம் பணியகத்தில் பெற்றுக் கொள்ளலாம் என அறிவிக்கப்படுகிறது.

(அ)

# தொலைக்கல்வி பயிற்சி நெறி இடமாற்றம்

யாழ்ப்பாணம், ஆக. 25

தீவக ஆசிரிய, மாணவர் களுக்கான தொலைக்கல்விப் பயிற்சி நெறி நாளை திங்கட் கிழமை 26 ஆம் திகதி முதல் 30 ஆம் திகதிவரை யாழ். மத் திய கல்லூரியில் நடை பெறும்.

ஏற்கனவே அறிவித்திருந் தது போல் மண்கும்பான் மகா வித்தியாலயத்தில் நடைபெற மாட்டாது.

(த)

# நல்லூரில் இன்று

யாழ்ப்பாணம், ஆக. 25

நல்லூர் உற்சவ காலத்தை முன்னிட்டு, அகில இலங்கைக் கம்பன் கழகம் நடத்தும் இசை அரங்கில் இன்று மாலை 5. 30 மணி முதல் செல்வன் பா. கண்ணனின் வயலினிசை யும், திரு. எஸ். பாலசிங்கத் தின் பாட்டும் இடம்பெறும்

நல்லை ஆதீன குருமூர்த்தி ஆலயத்தில் திரு. ந. சிவசண் முகமூர்த்தியின் ''கந்தரனு பூதி'' பற்றிய கதாப்பிரசங் கமும் இடம்பெறும்.

(அ)

# சிறிமாவோ சீனா செல்வார்

கொழும்பு, ஆக. 25

எதிர்க்கட்சித் தலைவி திரு மதி சிறிமாவோ பண்டார நாயக்கா விரைவில் சீனாவுக்கு விஜயம் செய்யவிருக்கிறார். அவருடன் சுதந்திரக் கட்சியில் உள்ள மூன்று பெண் எம்.பிக் களும் செல்வர் என்று தெரி விக்கப்படுகிறது.

(உ-எ)

# கருத்தரங்கு

யாழ்ப்பாணம், ஆக. 25

பலாலி ஆசிரிய கலாசாலை யில் நாளை 26 ஆம் திகதி முதல் 31 ஆம் திகதிவரை பயிற்சி ஆசிரியருக்கான சிறப்புக் கருத்தரங்கு நடை பெறும்.

(இ)

# வீரமரணம்

யாழ்ப்பாணம், ஆக. 25

கடந்த ஜூலை 15 ஆம் திகதி ஆனையிறவில் ஸ்ரீலங்கா இராணுவத்தினரு டன் ஏற்பட்ட நேரடி மோத லில் விடுதலைப் புலிகள் இயக் கப் போராளியான கரி காலன் [மாப்பானர் உதய குமார்—புத்தூர்] வீரமரண மடைந்தார்.

★ ★ ★

ஜூலை 30 ஆம் திகதி யன்று வெற்றிலைக்கேணிப் பகுதியில் நடைபெற்ற உக கிர மோதலில் கம்பன் [கனக் ராஜா சத்தியகுமார்—மாத கல்] வீரமரணமடைந்தார்.

[உ]

★ ★ ★

நேற்று முன்தினம் ஆனை யிறவு இராணுவ முகாம் பகுதியில் இராணுவத்தினரு டன் ஏற்பட்ட நேரடி மோதலில் தர்மன் (இராச துரை ரவி — கோப்பாய்) என்ற போராளி வீரமரண மடைந்தார்.

# வி. பி. சிங் இராஜினாமாச் செய்தார்

புதுடில்லி, ஆக. 25

ஜனதாதள் கட்சியின் நாடாளுமன்றக் குழுத் தலை வர் பதவியை முன்னாள் பிர தமர் வி. பி. சிங் ராஜினாமாச் செய்துவிட்டார்.

பிற்படுத்தப்பட்ட வகுப் பினரைச் சேர்ந்த ஒருவரை குழுவின் தலைவராகத் தெரிவு செய்யும்படி திரு. சிங் தமது கட்சியினரைக் கேட்டிருக் கிறார்.

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் இரங்கற் திருப்பலி அழைப்பும்



வீரஜனனம்:
27 - 08 - 1973

வீரமரணம்:
27 - 07 - 1991

### லெப். உமாசங்கர் (ரவி)

(சின்னமணி காஞ்சியஸ்)

களத்தினில் வீழ்வதும் வீரமடா — உன்
உளத்தினில் உதித்ததும் தீரமடா — நீ
நிலத்தினில் சிந்திய உதிரமடா
நிச்சயம் ஈழமாய் உதிக்குமடா!

இவரின் ஆன்ம சாந்திக்காக (26-08-1991) நாளை காலை 5. 45 மணிக்கு புனித யாகப்பர் ஆலயத்தில் நடைபெறும் இரங்கற்திருப்பலியில் பங்குபற்றி பிரார்த் திக்குமாறு வேண்டுகிறோம்.

8/3, மத்தியகிழக்கு வீதி,
குருநகர், யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்

(17675)

# மரண அறிவித்தல்கள்

## செல்வி எழில்வதனி ஜெயரட்ணம்

நெடுந்தீவைச் சேர்ந்த ஜெயரட்ணம் [ஆசிரியர் யா/முத்துத்தம்பி மகாவித்தியாலயம்] (கனடா), நயினாதீவைச் சேர்ந்த சியாமளாதேவி (ஆசிரியை யா/இளையதம்பி மாகாவித்தியாலயம்] ஆகியோரின் அருமை மகளும். ஆதவன், செந்தூரன் ஆகியோ ரின் அருமைச் சகோதரியும், திரு/திருமதி அம்பலம். திரு/திருமதி பழனிவேலு ஆகியோரின் அருமைப் பேத்தியும், திரு/திருமதி முத்துக்குமாரு, திரு/திருமதி வரதராஜா [கனடா], திரு/திருமதி சந்திரகாந்தன் (ஜேர்மனி), செல்வி சித்திராதேவி ஆகியோரின் பெறாமகளும், திரு/திருமதி கணபதிப்பிள்ளை, திரு/திருமதி பரமேஸ்வரன் (ஆசிரியர் விவேகாநந்தா கல்லூரி கொழும்பு, உரிமையாளர் ஈஸ்வராலொஜ் கொழும்பு), திரு/திருமதி விக்னேஸ்வரன் (நோர்வே), பாலேஸ்வரன் (கனடா), ஜெகதீஸ்வரன் (லண்டன்), ஆகியோரின் அன்பு மருமகளும், திருமதி வேலுப் பிள்ளையின் பூட்டியுமாகிய எழில்வதனி 22 - 08 - 1991 இல் காலமாகி கொழும்பில் இறுதிக்கிரியைகள் நடைபெற்றது என்பதை உற்றார், உறவினருக்கு அறியத்தருகின்றேன்.

Dr. க. சத்தியசீலன்
(மாமா)
18, மணல்தரை வீதி,
கந்தர்மடம்,
யாழ்ப்பாணம்.

73/11 பதிவாளர் வீதி,
திருநெல்வேலி கிழக்கு,
யாழ்ப்பாணம்.
(17896)

## கனகசபை கணேந்திரன்

சுன்னாகம் வாரிகலட்டியைச் சேர்ந்த கணேந் திரன் [விலை மதிப்பாளர்] லண்டனில் 20-8-91இல் காலமானார். அன்னார் திரு. செ. 'லண்டன்' கனக சபை, திருமதி க. பாக்கியவதி அவர்களின் சிரேஷ்ட புதல்வனும், மாணிக்கேந்திரன், இந்திராதேவி ஆகி யோரின் சகோதரரும், சே. மகுந்தரம், இராஜேஸ்வரி ஆகியோரின் மைத்துனரும் காலஞ்சென்ற மாணிக்கம் நடராசா [Chartered Valuer], ந. சிவமணி அவர் களின் மருமகனும், திரு. இ. தில்லைநாயகம், வேத நாயகி தம்பதிகளின் பெறாமகனும் ஆவார். அன் னாரின் ஈமக்கிரியைகள் 25-8-91 இன்று காலை 11-30 மணிக்கு லண்டனில் நடைபெறும். தயவுசெய்து இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

வாரிகலட்டி,
சுன்னாகம்.

தகவல்:
க. மாணிக்கேந்திரன்

[சி/0392]

இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிகேசன் [பிறைவேட்] லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2 இலக் கத்தில் உள்ள அச்சகத்தில் 25 - 08 - 1991 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org